بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 20, June 2014 (Tamil)**

## ஜெர்மன் ஆண்டு மாநாட்டின்போது வெளிப்பட்ட இறையருள்கள்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

பயணத்தின் காரணமாக சென்ற இரண்டு ஜுமுஆ குத்பாக்களை நான் ஜெர்மனியில் கொடுத்திருந்தேன். அங்கு ஜூன் 6- ஆம் தேதிய குத்பாவில் கிலாஃபத்துக்குக் கட்டுப்படுவது மற்றும் கிலாஃபத்துடன் நன்றியுணர்வுள்ளவர்களாக இருப்பது என்ற தலைப்பில் ஜெர்மனியிலுள்ள நிலைமைகளின் காரணமாக அங்குள்ள சில உதாரணங்களை குறிப்பிட்டேன் என்றாலும் அந்த குத்பாவை ஜெர்மனி மக்களுக்காக மட்டுமின்றி முழு உலகத்திற்காகவும் கொடுத்திருந்தேன். முழு உலகத்திலுள்ள அஹ்மதிகள் அதற்கான நல்விளைவை வெளிப்படுத்தினார்கள்; உடனே முழுமையான முறையில் கிலாஃபத்திற்கு கட்டுப்படுவது மற்றும் முழுமையான நன்றியுணர்வு ஆகியவற்றை வெளிப்படுத்தினார்கள். அது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. குறிப்பாக சிலர், எங்களில் சில பொறுப்பாளர்கள் சில வழிகாட்டல்களுக்கு சுய விளக்கத்தையும் கருத்தையும் கொடுக்கின்றனர்; இனி அவ்வாறு நடக்காது – இன்ஷா அல்லாஹ் என்றும் கூறியிருக்கிறார்கள். ஆக, இதுதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நிலைநாட்டிய ஜமாஅத்தின் அழகு ஆகும். கவனமூட்டப்பட்டால் உடனே கவனம் ஏற்பட்டு விடுகிறது. அல்லாஹ் எல்லா அஹ்மதிகளையும் இந்த கட்டுப்படுவதையும் நன்றியுணர்வை அதிகமாக்குவானாக.

ஜல்ஸாவிற்குப் பிறகு ஜல்ஸாவைப் பற்றி பொதுவாக நான் கூறுவது போன்று, இப்போது நான் இந்த பயணத்தைப் பற்றிய சில விஷயங்களைக் கூறுவேன். நமது மாநாடுகளைப் பற்றிய ஒரு பொலிவு ஜமாஅத் அல்லாதவர்கள், முஸ்லிம் அல்லாதவர்கள் மூலமாகவும் ஏற்படுகிறது. அஹ்மதிகள் கொண்டாடுகின்ற இந்த மாநாடு எப்படி நடக்கின்றது? என அவர்கள் கேட்பதையும், பார்ப்பதையும் நாம் காண்கிறோம். இந்த மாநாடுகளுக்கிடையில் அஹ்மதிகளின் செயல்பாடுகள் எப்படி நடக்கின்றன? மேலும் இவர்கள் என்ன கூறுகின்றார்கள்? நல்ல விஷயங்களைப் பேசுகிறார்கள் என்றால், அவர்களின் செயல்களும் அவர்களின் பேச்சுகளுக்கேற்ப இருக்கின்றனவா என்ன? அல்லது உலகவாதிகளைப் போன்று ஒரு கூட்டம் கூடுகின்றதா? என்றெல்லாம் அவர்கள் பார்க்கின்றனர். மேலும் மாநாட்டின் சூழ்நிலை ஓர் அற்புதமான சூழ்நிலையாக இருக்கிறது. அதனை உலக மாநாடுகள், விழாக்களுடன் ஒப்பிடவே முடியாது என்பதை அவர்கள் உணர்கின்றனர். இந்த மாநாடு முஸ்லிம் அல்லாத விருந்தினர்களுக்கு இஸ்லாத்தின் அழகிய போதனைகளை வழங்குவதற்கும், இஸ்லாத்தைப் பற்றிய ஐயங்களையும், சந்தேகங்களையும் நீக்குவதற்கும் காரணமாக அமைந்து விடுகிறது. அவ்வாறே உண்மையான இஸ்லாமாகிய அஹ்மதியத்தைப் பற்றி கொஞ்சமாவது செய்திகளை அறிந்திருக்கின்ற முஸ்லிம் அல்லாதவர்கள், அஹ்மதி அல்லாதவர்கள் மாநாட்டின் நிகழ்ச்சிகளை தமது கண்களால் காணும்போது அவர்களில் சிலர் பைஅத் செய்வதற்கு ஆயத்தமாகி விடுகின்றனர்; பைஅத் செய்து விடுகின்றனர். அல்லது எந்த அளவுக்கு தாக்கத்திற்குள்ளாகி விடுகின்றனர் என்றால், கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவர்களின் உள்ளம் முழுமையான முறையில் அஹ்மதிய்யத்தின் பக்கம் சாய்ந்து விடுகிறது. ஆக, இந்த மாநாடு இஸ்லாத்தைப் பற்றி நல்ல விளைவுகளை உருவாக்குகின்ற அதே நேரத்தில் தப்லீகிற்கும் மிகப் பெரும் காரணமாக அமைகின்றது.

எனவே ஜெர்மனியின் மாநாடும் நிச்சயமாக இந்த விஷயங்களுக்குக் காரணமாக அமைந்தது. ஆகவே நான் முதலில் மாநாட்டில் வந்த முஸ்லிம் அல்லாதவர்களின் தாக்கங்களை எடுத்துரைக்கின்றேன். அப்போதுதான் அல்லாஹ் எவ்வாறு வியக்கத்தக்க முறையில் தனது ஆதரவுகளையும், உதவிகளையும் காட்டிக் கொண்டிருகின்றான் என்பது தெரிய வரும். ஏனெனில் உள்ளம் என்பது அல்லாஹ்வின் அருளினாலேயே சாய முடியும். பிறகு மாநாடு மட்டுமல்ல; மாறாக,

விருந்தினர்களை அழைக்கும் ஜமாஅத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் செய்வதற்குக் காரணியாக அமைகின்றது. ஒவ்வொரு நிகழ்ச்சியும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை எடுத்துரைப்பதற்கும், தப்லீகிற்கான களத்தை திறப்பதற்கும் காரணமாக அமைகின்றது.

ஜெர்மனி சுற்றுப் பயனத்தின்போது பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டுவது, பள்ளிவாயில்களைத் திறப்பது ஆகியவற்றிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதன் மூலமாகவும் இஸ்லாத்தின் அழகிய போதனை மக்களுக்கு தெளிவானது. **இந்த இஸ்லாம் இதற்கு முன்னர் நமது கண்களுக்கு முன்னால் கொண்டு வரப்படவில்லை என (முஸ்லிமல்லாத) அவர்கள் வெளிப்படுத்தவும் செய்தனர். பிறகு செய்தித்தாள்கள் மூலமாகவும் பல மில்லியன் மக்கள் வரை இந்தத் தூதுச் செய்தி சென்றடைந்தது.** எப்படி இருப்பினும், முதன் முதலில் நான் மாநாட்டில் வந்திருந்த மற்றவர்களின் தாக்கங்களை இங்கு எடுத்துக் கூறுகிறேன். ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் அல்லாஹ்வின் அருளினால் பல்வேறு அண்டை நாட்டினரின் குழுக்களும் கலந்து கொண்டன. மிகவும் அதிக எண்ணிக்கையில் இவர்கள் கலந்து கொண்டனர். ஃபிரான்ஸ், பெல்ஜியம் ஆகியவற்றிலிருந்து வந்திருந்த புதிதாக பைஅத் செய்தவர்கள், தப்லீகின் கீழ் இருப்பவர்கள் ஆகியோர் மட்டுமின்றி, Estonia (எஸ்டோனியா), Croatia (கரோஷியா),Lithuania (லத்வேனியா),Sylvania (சில்வேனியா), Romania (ரோமானியா), Henry (ஹென்ரி), Montenegro (மோன்டினீக்ரோ), Bosnia (போஸ்னியா), மற்றும் ரஷ்ய நாடுகளில் Kosovo (கோசோவோ), Albania(அல்பானியா), Bulgaria (பல்காரியா), Macedonia (மெசடோனியா) ஆகிய நாடுகளிலிருந்தும் குழுக்கள் வந்திருந்தன. அவற்றில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், தப்லீகின் கீழ் உள்ளவர்கள், முஸ்லிம் அல்லாத நண்பர்கள் ஆகியோர் அடங்குவர்.

இவ்வாண்டு மாநாட்டில் Macedonia (மெசடோனியா) விலிருந்து 55 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் 28 கிறிஸ்தவ நண்பர்களாவர். மேலும் 10 அஹ்மதி அல்லாத முஸ்லிம்களும், 17 அஹ்மதிகளும் ஆவர். அவ்வாறே பல்காயாவிலிருந்து 82 நபர்களைக் கொண்ட குழு மிக நீண்ட பயணம் மேற்கொண்டவாறு வருகை தந்திருந்தனர். அந்த குழுக்களுடன் சந்திப்பும் நடந்தது. மாநாட்டின் ஆன்மீக சூழ்நிலையும் இருந்தது. அதனால் அவர்கள் போதுமான அளவுக்கு தாக்கத்திற்குள்ளானார்கள். வெளிப்படையான ஒரு மாற்றம் காணப்பட்டது; அதனை அவர்கள் பகிரங்கமாக வெளிப்படுத்தினார்கள். அவர்கள் ஜமாஅத்தின் தொண்டாற்றும் உணர்வை, விருந்தோம்பலின் உணர்வை மிகவும் பாராட்டினர். முன்னர் கூறியது போன்று, மெசடோனியாவிலிருந்து 55 பேர் கொண்ட குழு ஏறக்குறைய 2000 கிலோ மீட்டர் தூரம் பயணித்து வருகை தந்திருந்தனர். அவர்களில் இரண்டு பத்திரிகையாளர்களும் அடங்குவர். அவர்கள் நிகழ்ச்சிகளை பதிவு செய்து கொண்டிருந்தனர். மேலும் நாங்கள் திரும்பிச் சென்று எங்களின் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் காட்டுவோம் என அவர்கள் கூறினர். மேலும் இந்த குழுவைச் சார்ந்த 9 பேர் மாநாட்டின் கடைசி நாளில் பைஅத்தும் செய்தனர்.

Nikolcho Goshevski (நிகல்சோ கோஷேவ்ஸகி) என்ற அரசு அலுவலராகிய ஒரு விருந்தினர் கூறுகையில், மார்க்கத்தை அறிவதிலும், மார்க்கத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலும் எனது இந்த வருகை மிகவும் நன்றாக இருந்தது; மாநாட்டின் நிகழ்ச்சிகள் எனக்கு மிகவும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும் கலீஃபாவின் சொற்பொழிவு இஸ்லத்தைப் பற்றிய எனது (தவறான) சிந்தனைகளை மாற்றி விட்டது. இதற்கு முன்னர் நான் இஸ்லாத்தை ஒரு தீவிரவாத மதமாகப் பார்த்து வந்தேன். இப்போது மாநாடு எனது முந்தைய சிந்தனைகளை மாற்றி விட்டன. இஸ்லாம் அமைதியை போதிக்கும் மார்க்கமாகும் என்பதை நான் புரிந்து கொண்டேன் எனக் குறிப்பிட்டார்.

அல்பானியாவிலிருந்து 21 பேர் கொண்ட குழு வந்திருந்தது. அதில் 10 அஹ்மதி அல்லாதவர்கள் மற்றும் 11 அஹ்மதிகள் ஆவர். அதில் ஒருவர் நீண்ட காலமாக இராணுவத்தில் இருந்திருக்கிறார். அவர் கூறினார்: **இப்படிப்பட்ட ஒழுங்கு முறையை நான் உலகில் எங்கேயும் பார்க்கவில்லை.** அஹ்மதி சகோதரர்களிடம் சமூக சேவை பற்றிய உணர்வு காணப்படுவதும் ஒரு மகிழ்ச்சிகரமான அனுபவமாகும். சிறுவர்கள் கூட தண்ணீர் கொடுத்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

ரோமானியாவிலிருந்து வந்திருந்த குழுவில் சிரியாவைச் சேர்ந்த ஹுஸைனுல் ஹாஃபிஸ் சாஹிப் அவர்களும் இருந்தார்கள். அவர் நீண்ட காலமாக ரோமானியாவில் வாழ்ந்து வருகின்றார். அவர் கூறுகிறார்: மாநாட்டில் கலந்து கொண்டபோது கலீஃபாவை தூரத்திலிருந்து பார்ப்போமா அல்லது அருகிலிருந்தும் பார்க்க வாய்ப்பு கிடைக்குமா? என நமது முபல்லிக் சாஹிபிடம் கேட்டார். அப்போது முபல்லிக் சாஹிப், கலீஃபா அவர்களை சந்திக்கவும் வாய்ப்பு கிடைக்கும் எனக் கூறியபோது அவருக்கு உறுதி ஏற்படவில்லை. முபல்லிக் சாஹிப் கூறுகிறார்: அந்த நபர் மாநாட்டின் முதல் நாளிலிருந்தே, தான் கலீஃபாவை நேசிப்பதாகவும், முழு உலகிற்கும் ஒரே கலீஃபத்துல் முஸ்லிமீன் இருந்தால் முஸ்லிம்களின் எல்லா பிரச்சனைகளும் தீர்ந்து விடும்; ஏனெனில் கலீஃபா

ஒருவர்தான் நமக்கு நேரான, சரியான வழியைக் காட்ட முடியும் என்றும் மீண்டும் மீண்டும் கூறினார். இவர் சந்திப்பின்போதும் இந்தக் கருத்தை வெளிப்படுத்தினார்.

பிறகு அவர் நமது முபல்லிக் சாஹிபிடம், கலீஃபா எப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்? எனக் கேட்டார். அப்போது முபல்லிக் சாஹிப் கிலாஃபத் பற்றியும், கிலாஃபத்தே ராஷிதா எப்படி தேந்தெடுக்கப்பட்டது என்பதைப் பற்றியும் எடுத்துக் கூறிய பிறகு இப்போதும் கிலாஃபத் தேர்ந்தெடுப்பின்போது அல்லாஹ், தேர்ந்தெடுப்பவர்களை தனது ஆதிக்கத்தின் கீழ் எடுத்துக் கொள்கின்றான். மேலும் மறைவான வஹியின் மூலமாக ஒன்று சேர்க்கின்றான் எனக் கூறினார். மறைவான வஹி மற்றும் இறைவனின் ஆதிக்கத்தின் கீழ் வருதல் என்ற அம்சம் என்பது அவருக்குப் புரியவில்லை. ஆனால் மாலையானதும் இப்போது எனக்கு இந்த விவகாரத்திற்கு தீர்வு கிடைத்து விட்டது என்றார்.

அவரே கூறுகிறார்: கலீஃபா லஜ்னாவுக்கு சொற்பொழிவாற்றி விட்டு திரும்பியபோது லுஹர் தொழுகைக்காக மக்கள் வரிசையில் நின்று கொண்டிருந்தனர். நானும் நின்று விட்டேன். நான் கலீஃபாவைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது கலீஃபாவின் மீது எனது பார்வை பட்டதுமே என்னையுமறியாமல் அனிச்சையாக எனது கை சலாம் கூறுவதற்காக மேலே உயர்ந்தது.

அவர் கூறுகிறார்: இது என்னையுமறியாமல் செய்த செயலாகும். இதன் மூலம் மறைவான வஹி மற்றும் இறைவனின் ஆதிக்கம் என்பதன் விவகாரத்திற்கு தீர்வு கிடைத்து விட்டது. அவர் கூறினார்: பொதுவாக அவர், எவருக்கு சலாம் கூறினாலும் – எவ்வளவு பெரியவராக இருந்தாலும் கையை உயர்த்தி சலாம் கூறியதில்லை. ஆனால் இப்போது நான் கையை உயர்த்தி கலீஃபாவுக்கு சலாம் கூறியது எனது அதிகாரத்திற்குட்பட்ட செயல் அல்ல. மாறாக நிச்சயமாக இது அல்லாஹ்வின் ஆதிக்கத்திற்குட்பட்ட செயலாகும் என்றார். இவர் கணிசமான அளவுக்கு ஒப்புக் கொண்டு விட்டார். மேலும் கொஞ்சம் சிந்தித்த பிறகு அவர் ஜமாஅத்தில் இணைந்து விடுவார் – இன்ஷா அல்லாஹ்.

பிறகு லத்வேனியாவிலுள்ள பல்கலைக் கழகத்திலிருந்து 3 விருந்தினர்கள் வந்திருந்தனர். ஒரு மாணவர் தமது தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறினார்: இந்த மாநாடு, இஸ்லாத்தைப் பற்றி குறைவான கருத்துகளை அல்லது எதிரான கருத்துகளைக் கொண்டுள்ள இந்த மேற்கத்திய சிந்தனையாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும். ஏனெனில் இந்த மாநாடு அவர்களின் எல்லைகுட்பட்ட சிந்தனையை பரந்ததாக்க முடியும். நீங்கள் மிகவும் நேர்மறையான சிந்தனைகளைக் கொண்டுள்ளீர்கள். எல்லா நேரமும் முகத்தில் புன்சிரிப்பும், புன்முறுவலும் இருக்கிறது. ஹுஸூர் கூறுகிறார்கள்: இவர் என்னை சந்தித்தபோதும் நல்ல தாக்கத்தைப் பெற்றிருந்தார்.

Dominik (டோமின்க்) என்ற ஒரு விருந்தினர் கூறுகிறார்: கலீஃபாவின் சொற்பொழிவினால் நமது அறிவு அதிகமாகியது. ஜமாஅத்தைப் பற்றி முதலில் கொஞ்சம் தெரியும் என்றாலும் கலீஃபாவின் சொற்பொழிவைக் கேட்ட பிறகு பல புதிய விஷயங்களைப் பற்றி தெரிய வந்தது. பிறகு இன்னொரு விருந்தினர், இன்று நீங்கள் எடுத்துரைத்த மார்க்க நல்லிணக்கம் மற்றும் சமாதானம் பற்றிய போதனை மிகவும் உயரிய போதனையாகும். இது ஜெர்மன் சட்டத்திற்கு முற்றிலும் ஏற்றதாகும் எனக் கூறினார். **மேலும்பல்கலைக் கழகத்தில் என்னுடன் ஓர் அஹ்மதி மாணவன் படிக்கின்றான். அவனுடைய செயலிலிருந்து அஹ்மதி முஸ்லிம்களுக்கும் பிற முஸ்லிம்களுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது என்பது தெரிய வருகிறது என்றும் கூறினார்.**

இந்த செயல் அளவிலான வித்தியாசத்தைதான் நாம் எல்லா துறையிலும் காட்ட வேண்டும். இது தப்லீகிற்கான மிகப் பெரிய வழியாகும். எனவே மக்களின் பார்வை ஒவ்வோர் அஹ்மதியின் செயல் அளவிலான முன்மாதிரிகளின் பக்கம் இருக்கிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஜெர்மனியைச் சேர்ந்த இன்னொருவர் கூறுகிறார்: **கலீஃபாவின் சொற்பொழிவைக் கேட்டபோது அதை நானே எழுதினேன் என்பது போன்று இருந்தது. ஏனெனில் அதன் ஒவ்வொரு சொல்லும் எனது உள்ளத்தின் குரலாக இருந்தது.**

ஒரு பெண்மணி கூறுகிறார்: கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் டாக்டர் மஹ்தி அலீ சாஹிப் அவர்களின் ஷஹாதத்தைப் பற்றிக் கூறும்போது என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை; அழுது விட்டேன். பிறகு கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், நாம் இந்த ஷஹாதத் நடந்தாலும் நமது தொண்டு செய்யும் உணர்வில் எந்தக் குறைவும் ஏற்படவில்லை; நாம் தொண்டைத் தொடர்வோம் எனக் கூறியபோது எனது உணர்வைக் கட்டுப்படுத்துவது எனக்கு கடினமாகி விட்டது.

இன்னொரு பெண்மனி கூறுகிறார்: அமைதிக்கான தீர்வைக் கூறியபோது நான் மிகவும் தாக்கத்திற்குள்ளானேன். அதாவது உலகத்திலுள்ள எல்லா மனிதர்களும் மார்க்கம், மதம்

ஆகியவற்றிக்கு அப்பாற்பட்டு ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும்; ஒருவர் மற்றவர்களுக்கிடையில் பகைமை வளந்து கொண்டே செல்லக் கூடாது ஆகியவற்றைக் கேட்டு மிகவும் பரவசப்பட்டேன். நிகழ்ச்சியைப் பொருத்தவரை இந்த விழா மிகவும் வெற்றிகரமாக இருந்தது. உங்கள் ஜமாஅத்தை மட்டும் அழைக்காமல், அல்லது அரசியல் வாதிகளை மட்டும் அழைக்காமல் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களையும் அழைத்திருக்கிறீர்கள். இது என்னை மிகவும் கவர்ந்தது.

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: எனவே பள்ளிவாயில்களின் திறப்பு விழாவின்போது, இதன் மூலமாக (தப்லீகிற்கான) புத்தம் புதிய வழிகள் திறக்கும் என அஹ்மதிகளுக்கு தூதுச் செய்தி வழக்கப்படுகிறது என்றால் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அஹ்மதிகளின் ஊரில் பள்ளிவாயில் திறக்கப்படுகிறதென்றால் அல்லது பள்ளிவாயில் உருவாகிறதென்றால் அவர்களின் பொறுப்புகள் அதிகமாகின்றன.

ஜெர்மனி ஆண்டு மாநாட்டின் மூன்றாம் நாள் அல்லாஹ்வின் அருளினால் பைஅத்தும் நடைபெற்றது. **அதில் அங்கிருந்த 19 சமுதாயங்களைச் சேர்ந்த 83 பேர் பைஅத் செய்யும் நல்வய்ப்பைப் பெற்றனர்.** பைஅத் செய்தவர்களின் சில சம்பவங்களைக் கூறுகிறேன்:

மராக்கஷைச் சேர்ந்த அப்துல் காதிர் என்ற ஒரு நண்பர் கூறுகிறார்: எனக்கு 6 ஆண்டுகளுக்கு முன் அஹ்மதிய்யத்தைப் பற்றி அறிமுகம் கிடைத்தது. ஆனால் சில வாரங்களுக்கு முன் அஹ்மதிய்யத்தைத் தேடியவாறு ஜமாஅத்தின் தொழுமிடத்தை சென்றடைந்தேன். ஜமாஅத்தைப் பற்றி மேலும் அதிகமாக அறிமுகம் கிடைத்தது. பிறகு தொழுகையிலும் ஜுமுஆவிலும் வர ஆரம்பித்தேன். எனக்கு ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான அழைப்பு வந்தது. அதில் நான் கலந்து கொண்டேன். மாநாட்டின் ஆன்மீக சூழ்நிலையைக் கண்டு, **கலீஃபாவுடன் ஜமாஅத் உறுப்பினர்களின் அன்பையும் கட்டுப்படுதலையும் பார்த்து எனது உள்ளத்தில், ‘நிச்சயமாக இது உண்மையாளர்களின் ஜமாஅத்தாகும்’ என்ற ஓர் அசாதாரணமான மாறுதல் ஏற்பட்டது.** அதனால் நான் ஜமாஅத்தில் இணைய தீர்மானித்து பைஅத் செய்து விட்டேன்.

பிறகு ஈராக்கைச் சேர்ந்த ஸ்வீடனிலுள்ள ஒரு நண்பர் கூறுகிறார்: மாநாட்டின் ஆன்மீக சூழ்நிலையைக் கண்டு மிகவும் தாக்கத்திற்குள்ளானேன். இதுவே நான் தேடிய உண்மையான, சரியான ஜமாஅத்தாகும். மேலும் எனது எல்லா கேள்விகளுக்கும் விடையாக விளங்குவது இந்த ஜமாஅத்தான். பிறகு அவர் மாநாட்டின்போது பைஅத் செய்து விட்டார்.

பிறகு ஃபிரான்ஸிலிருந்து ஒரு நண்பர் வந்திருந்தார். அவர் கூறினார்: **நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவன்.** நான் எந்த மார்க்கப் பயிற்சியும் செய்வதில்லை. பெற்றோர் கூறியதனால் தேவாலயத்திற்கு சென்றேன். அங்கே இயேசு கிறிஸ்துவின் சிலைதான் வைக்கப்பட்டிருந்தது. நான் இறைவனை வணங்குவதா? அல்லது முன்னால் இருக்கும் இயேசு கிறிஸ்துவின் இந்த சிலையை வணங்குவதா? என்பது எனக்குப் புரியவில்லை. எந்த அஹ்மதி நண்பருடன் எனக்கு தொடர்பு ஏற்பட்டதோ அவர் எனக்கு ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் செய்தார். இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் நூலை படிக்கக் கொடுத்தார். மாநாட்டில் கலந்து கொண்டேன். ஜமாஅத்துடைய இமாமின் சொற்பொழிவைக் கேட்டேன். எனது உள்ளத்தின் நிலை மாறி விட்டது. மேலும் நான் மாநாட்டின் மூன்றாவது நாள் **பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டேன்.** ஃபிரான்ஸிலிருந்து வந்திருந்த இவர் ஃபிரான்ஸை தாயகமாகக் கொண்டவராவார்.

ஃபிரான்ஸிலிருந்து வந்திருந்த **ஓர் அரபி அஹ்மதி** தமது பழைய கனவைப் பற்றிக் கூறுகிறார்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் மரணத்திற்கு கொஞ்ச காலத்திற்கு முன் நான் ஆன்மீகக் கனவில்,

يَاأَيَّتُهَا النَّفْسُ الْمُطْمَئِنَّةُ ارْجِعِي إِلَىٰ رَبِّكِ رَاضِيَةً مَّرْضِيَّةً فَادْخُلِي فِي عِبَادِي وَادْخُلِي جَنَّتِي

**(யா அய்யத்துஹந் நஃப்ஸுல் முத்மயின்ன துர்ஜியீ இலா ரப்பிகி ராழியதம் மர்ழிய்யா. ஃபத்குலீ ஃபீ இபாதீ வத்குலீ ஜன்னதீ** (பொருள்: நிம்மதியடைந்த ஆன்மாவே! நீ உனது இறைவனிடம் திருப்தியடைந்தவாறும் அவன் (உன்னிடம்) திருப்தியடந்த வாறும் (அவனிடம்) திரும்பி வருவாயாக; மேலும் நீ (தேர்ந்தெடுக்கப்பட்ட) என் அடியார்களுக்கிடையே நுழைந்து விடுவாயாக. மேலும் நீ எனது சுவர்க்கத்தில் நுழைவாயாக - திருக்குஆன் 89:28-31) என ஒருவர் கூறிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். பிறகு ஓர் இளைஞரைக் கண்டேன். அவரைப் பற்றி இவர் உமது புது கலீஃபா ஆவார் என கனவில் எனக்குக் கூறப்பட்டது. அவர் கூறுகிறார்: இந்தக் கனவிற்குப் பிறகு நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மரணம் ஏற்படுகிறது. கிலாஃபத்திற்கான தேர்தல் நிகழ்ந்தபோது எனக்கு அந்தக் கனவு நினைவிற்கு வந்தது. நான் படத்தைப் பார்த்தபோது அது

தாங்களாகவே இருந்தீர்கள்.

ஆக, இந்த விஷயங்கள் அல்லாஹ்வின் சிறப்பான ஆதரவுகளை தெரிவிக்கின்றன. மாநாட்டின்போதும் பள்ளிவாயில்களின் திறப்பு விழா, அடிக்கல் நாட்டு விழா ஆகிய நிகழ்ச்சிகளின்போதும் அல்லாஹ்வின் அருள்கள் நமக்குத் தென்பட்டன.

இப்போது நான், நம்மை ஆய்வுசெய்வதன் பக்கம் கவனமூட்டக் கூடிய சில விஷயங்களையும் கூற விரும்புகிறேன். அல்லாஹ் எவ்வாறு தனது ஆதரவுகள், உதவிகள் ஆகியவற்றின் காட்சிகளைக் காட்டுகிறான் என்பதில் நாம் மகிழ்ச்சி கொள்ள வேண்டும்; அதற்கு நன்றியும் செலுத்த வேண்டும்.நன்றியும் செலுத்துகிறோம். அதே நேரத்தில் நம்மில் **எவராவது ஒருவரின் செயல் அல்லது நமது செயல் அல்லாஹ்வின் அருளிலிருந்து இழப்பிற்குரியவராக நம்மை ஆக்கிவிடக் கூடாது என்ற கவலையும் நமக்கு இருக்க வேண்டும்.** மற்றவர்களுக்கு பொதுவாக நல்லவைகள் தென்படுகின்றன. ஆனால் **நமது குறைகள், குறைபாடுகளின் பக்கமும் நமது பார்வை இருக்க வேண்டும்.** எவ்வாறு நாம் நமது நிலைமைகளையும், நமது பணிகளையும் சிறப்பாக செய்ய முடியும் என்று முயற்சி செய்ய வேண்டும். **குறிப்பாக பொறுப்பாளர்கள் - அதிலும் குறிப்பாக தேசிய அளவிலான பொறுப்பாளர்களும் மேலிட பணியாளர்களும் இந்த ஆய்வினை செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. அங்கு இருந்த கவனிக்க வேண்டிய விஷயங்கள், குறைகள், குறைபாடுகள் ஆகியவை பற்றி, ஜெர்மனி அமீர் சாஹிப் அவர்கள் எஞ்சியிருந்த குறைபாடுகள், பலவீனங்களுக்காக மன்னிப்பை வேண்டுகிறோம் என எனக்கு எழுதியிருந்தார். ஆனால் இவ்வாறு எழுதி விடுவது மட்டும் போதுமானதன்று. ஆண்டு முழுக்க ஆய்வு செய்யாத வரை - செயல் அளவில் அதனை சரி செய்யாத வரை மன்னிப்பு வேண்டுவதில் எந்த பயனும் இல்லை. உண்மையான விஷயம் சீர்திருத்தமாகும்; செயல் அளவிலான முயற்சியாகும். மன்னிப்பு வேண்டுவது எந்த பயனையும் தராது.**

**Macedonia** (மெசடோனியா) வைச் சேர்ந்த ஒரு பெண் பத்திரிகையாளர் என்னிடம், நீங்கள் மாநாட்டின் எல்லா ஏற்பாடுகளைப் பற்றியும் மனநிறைவு கொண்டவர்களாக இருக்கின்றீர்களா? எனக் கேட்டார். அவருடைய எண்ணம் என்ன என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஒருவேளை சில குறைபாடுகளை சுட்டிக் காட்ட விரும்பினாரோ என்னவோ? நூற்றுக்கு நூறு மன நிறைவு கொண்டவனாக இருக்கிறேன் என நான் (அவரிடம்) கூறியிருந்தால் ஒருவேளை அடுத்த கேள்வியைக் கேட்டிருக்கலாம். நான் அவரிடம், 'முன்னேற்றம் காணும் சமுதாயங்கள் முன்னரை விட சிறந்தவற்றை தேடுகின்றன என்று கூறினேன். எனவே சிலருடைய புகழ்துரைகளைக் கேட்டு விட்டு நாம் செய்யவிருந்ததைச் செய்து விட்டோம்; மிகச் சிறந்த பணி நடைபெற்று விட்டது எனக் கூறி விட முடியாது. வெளிப்படையான குறைபாடுகளை நாம் மறந்து விட முடியாது. இவற்றை ஒருபோதும் புறக்கணிக்க முடியாது; புறக்கணிக்கவும் கூடாது என பதில் கூறினேன். அப்போது அந்தப் பெண்மணி மவுனமாகி விட்டார்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: **எப்படி இருப்பினும் செயல் அளவில் சிறந்ததை உருவாக்குங்கள்; அப்போதுதான் இதற்கு பரிகாரம் ஏற்பட முடியும்.** வெறும் பேச்சுகளினால் ஏற்படாது. கவனம் இருந்தால் எல்லாம் ஏற்பட முடியும். கனடாவின் ஜமாஅத்திலும் ஓர் ஆண்டில் இப்படித்தான் ஏற்பட்டது. அவர்களுக்கு நான் கவனமூட்டினேன். அவர்கள் கவனம் செலுத்தினார்கள். செயல் அளவில் காலெடுத்து வைத்தனர். இப்போது நல்ல ஏற்பாடு இருக்கிறது என்று அங்குள்ள மக்கள் எழுதுகின்றனர். ஏனெனில் அவர்கள் விஷயத்தைக் கேட்டனர். அதன்படி செயல்பட்டனர்; அல்லது செயல்பட முழுமையாக முயற்சி செய்தனர்.

ஜெர்மனியிலுள்ளவர்களும் இந்த கொள்கைப்படி செயல்பட்டால் சிறந்ததாகி விடும் - இன்ஷா அல்லாஹ். பொதுவான பணியாளர்கள் மற்றும் ஜமாஅத் உறுப்பினர்கள் நிம்மதியிழந்தவாறு (மன்னிப்புக் கடிதம்) எழுதுகிறார்கள். இப்போதும் அநேகமாக எழுதலாம். **ஆனால் தேசிய பொறுப்பாளர்கள் தமது திரைகளிலிருந்து வெளிவர வேண்டும். அவர்கள் தம்மை மேலதிகாரி எனக் கருதக் கூடாது. மாறாக, தொண்டர் எனக் கருதி ஜமாஅத்திற்கு தொண்டு செய்ய வேண்டும். இந்த சிந்தனையை தங்களிடம் உருவாக்க வேண்டும்.** அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக. ஜமாஅத்திற்குக் கிடைக்கின்ற வெற்றிகளை அல்லாஹ்வின் அருள்களாகக் கருதுங்கள். பணிவிலும், தன்னடக்கத்திலும், நன்றி செலுத்துவதிலும் முன்னேறுவதற்கு முயற்சி செய்யுங்கள். எல்லா பொறுப்பாளர்களிடம் இந்த ஆன்மாவை அல்லாஹ் உருவாக்குவானாக. நாம் முன்னரை விட அதிகமாக அல்லாஹ்வின் அருள்களை ஈர்ப்பவர்களாவோமாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By *O.M. Muzzammil Ahmad***